**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No.10/2019

**21.11.2025**

## D.W.1- கபிலன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்கு சொத்துக்கள் எனது தாத்தா ராசுத்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். எனது தாத்தா மொத்தம் ஆண், பெண் பிள்ளைகள் சேர்த்து 8 பேர்கள என்றால சரிதான். அதில கணேசன என்ற மகன் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார். பி.வா.சா.ஆ.1 ஆவணமானது எனது தாத்தா ராசுத்தேவர் வாங்கிய கிரையப்பத்திரம் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் கண்ட தண்ணீர்பந்தல் மானிய சொத்து என்றால் தெரியாது. மேற்படி பத்திரத்தில் கண்ட சொத்தை யாருக்கும் பாகமாக ஒதுக்க முடியாது என்றாலும், தனிநபர் பட்டா சொத்து கிடையாது என்றாலும் சரியல்ல. மேற்படி சொத்திற்கான பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா யார் பெயரில் உள்ளது என்பதும் தெரியாது. மேற்படி மானிய சொத்தை தான் 2வது வாதியின் கணவர் தர்மருக்கு ஒதுக்கப்பட்டது என கூறுகிறேன் என்றால் சரிதான். மானிப நிலத்தை பாகம் பிரிக்க முடியாது என்றாலும், வழக்கிற்காக 2வது வாதியின் கணவருக்கு ஒதுக்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மானிப நிலம் என பட்டாவில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி நிலம் மானிப நிலமாக இருப்பதால் மேற்படி பத்திரத்தில் கண்ட சொத்தை ராசுத்தேவர் வாரிசுகள் கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம என்றாலும், பாகம பிரிக்கவில்லை என்றாலும சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ,1 பத்திரத்தின் சர்வே எண்.334/6ல் கட்டுப்பட்ட அனைத்து நிலமும் மானிப நிலம் என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.334/6ம் மானிப நிலம் என்றால் தெரியாது. மேற்படி பி.வா.சா.ஆ,2ல் உள்ள மற்றொரு சர்வே எண்.333/1ஏயில் கண்ட சொத்தும் பத்திரத்தில் போடவில்லை என்றாலும் மானிப சொத்து என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்.333/1ஏ விற்கான பட்டாவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணின் சொத்தையும் 2வது

வாதியின் கணவர் தர்மருக்கு ஒதுக்கப்பட்டதாக கூறுகிறேன் என்றால் சரிதான். தாவா 1,2 சொத்துக்களை பாகம் பிரிக்கவில்லை என்றாலும், தர்மருக்கு ஒதுக்கப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உசிலம்பட்டி டவுனில் எங்களுக்கு 2 கடைகள் உள்ளன என்றால் சரிதான். மேற்படி கடைகள் சம்மந்தமாக ராசுத்தேவரின் வாரிசுகளுக்குள் பத்திரம் போட்டு விற்பனை செய்துவிட்டதால் மேற்படி கடைகளை இவ்வழக்கில் வாதிகள் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணம் இவ்வழக்கிற்கு தேவையற்ற ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணமானது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தில் வாதிகள் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். வாதிகளுக்கு இந்த பத்திரத்தை பற்றி தெரியுமா என்றால் அவர்களுக்கு தெரியுமா என்பது எனக்கு தெரியாது. எனது பெரியப்பா வகையறாக்கள் பதிந்து கொண்ட பி.வா.சா.ஆ.4 ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.4 பத்திரம் பற்றி வாதிகளுக்கு தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 முதல் பி.வா.சா.ஆ.9 மற்றும் பி.வா.சா.ஆ.12 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்டது என்பதால் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 ஆவணம் எனது தந்தை எழுதிக்கொடுத்து என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் வாதிகளின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.11 ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.13 ஆவணமானது மானிப நிலத்திற்கு தவறாக 2ம் வாதியின் கணவர் தர்மர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது மேற்படி பட்டா நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பட்டா நிலம் தர்மருக்கு உரிமைமூலம் அடைந்ததாக கூறுவது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.14 பட்டா வாதிகளை விசாரிக்காமல் வழங்கபட்டது என்பதால் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.15 ஆவணம் தாவா சொத்தை பொறுத்து உரிமைமூலத்தை தீர்மானிப்பதற்கு உகந்த ஆவணம் இல்லையென்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட மனு ரசீது வாதிகள் தாவா சொத்தில் பங்கு கேட்டு தகராறு செய்ததால் கொடுக்கப்பட்டது. மேற்படி ரசீது பாகப்பிரிவினை வழக்கிற்கு வழக்கு மூலம் எழுந்தது தெளிவாக தெரிகிறது என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.17 வீட்டு வரி ரசீது சம்மந்தமான வீடு வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வீடு சம்மந்தமாக பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வீட்டு ரசீதை வைத்து எனது தந்தைக்கு மேற்படி வீடு சொந்தமானது என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.18, பி.வா.சா.ஆ.19 ஆவணங்களை வைத்து எனது தந்தைக்கு மேற்படி வீடு சொந்தமானது என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக எங்களுக்குள் பதிவு பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். 1983ல் வாய்மொழியாக எந்த பாகப்பிரிவினை நடக்கவில்லை என்றாலும் வாதிகள் கேட்கும் பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. எனது தாத்தாவின் கிரைய சொத்தான மானிப சொத்து உட்பட அவரது அனைத்து சொத்துக்களையும் வாதிகள், பிரதிவாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும், வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றாலும், வாதிகள் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**ம.வி.இல்லை.**

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.11.21 18:22:28 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.